புதினப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது | உ சிவமயம் | விரோதி௵(1889) ஆவணி௴ உஅ ஆரம்பமானது

# இந்துசாதனம்

(Supplement to the Hindu Organ)

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

பத்திரக்கிரயம்.

வருஷம் ஒன்றுக்கு

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப்பட்டினம் | ரூ | 5 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 9 00 |
| இலங்கை இந்தியா | ரூ | 8 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 12 00 |
| தொடுவாய்ப்பகுதி | ரூ | 9 00 |
| இங்கிலீசும் தமிழும் | | 13 00 |
| தனிப்பிரதி | சதம் | 05 |

முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

“மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.”
—அப்பர் சுவாமிகள்

விளம்பர விகிதம்.

முதன் முறைக்கு

| | |
|---|---|
| ,, ஒரு கலம் | ரூ. 10 00 |
| ,, அரைக் கலம் | ரூ. 5 50 |
| ,, கால் கலம் | ரூ. 4 00 |
| ,, ஒரு அங்குலம் | ரூ. 1 00 |

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற்பாதி.

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படா விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

புத்தகம்—சகூ | யாழ்ப்பாணம்:— ஈசுவர௵ ஆவணி௴ ௨௳ ( 1937 ஆகஸ்ட் 19 ) வியாழக்கிழமை | இலக்கம்—கூ௯

## விடை ஊரும் விமலன்

[இது, ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள் திருமயிலை வெள்ளீச்சரத்தில் 27-4-37 ல் நிகழ்த்திய சொற்பொழிவின் குறிப்பு. திரு. கச்சி முனிசாமி உடையார் B. A. அவர்களால் எழுதப் பெற்றது]

அயனுந் திருமாலும் வந்து பிறப்பதற்கு ஆசைப்படுகின்ற இச் சிறந்த உலகத்தில் பலவகைப்பட்ட பிறவிகளுக்குள் மிக உயர்ந்த ஒன்றாயிருக்கின்ற மனிதப் பிறவியை அடைந்த நாம் பல பொருள்கள் உடையராயிருக்கின்றோம். அவற்றுளெல்லாம் மிகச் சிறந்தது அறிவு. எது ஒன்று உடைமையால் எல்லாம் உடையராய்க் கருதப் படுகின்றோமோ, எது ஒன்று இன்மையால் மற்றைய யாவுமிருந்தும் ஒன்றும் இலராய்க் கருதப் படுகின்றோமோ, அது அறிவாகும்.

“அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்
என்னுடையரேனு மிலர்”

இவ்வறிவு ஒன்றே மனிதனைச் சிறப்பிப்பது. இஃது ஆராய்ச்சி அறிவு அநுபவ அறிவு என இருவகைப்படும். ஆராய்ச்சி அறிவு இருந்தபின் தான் அநுபவ அறிவு விளங்கும். ஆராய்ச்சி அறிவை நாம் முன்னர்த் தொழிற்படுத்த வேண்டும். அறிவு தொழிற்பட மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து கருவிகள் உதவி செய்கின்றன. இவற்றுள் தூரத்தில் சென்று அறியும் இயல்புடைமையின் கண் மிகச்சிறந்த கருவி. கண்ணுக்குப் புலப்படும் பொருள்களை முதலில் ஆராய்ந்து பின் புலப்படாதபொருளை ஆராய்ந்து அதைப் பெற்று அதனால் உண்டாகும் இன்பத்தை அநுபவிக்க வேண்டும் என்று நிச்சயிப்பவரே அறிவு பெற்றோராவர்.

கண்ணைக் கொண்டு ஆராயப் புகின் அதற்குப் புலப்படுவது உலகமும் அதிலுள்ள பலவகைப்பட்ட உடல்களுமாம். ஐம்பூத இயற்கைநிலை உலகம், அவற்றின் மாறிய நிலை உடல். உடல்கள் அவன், அவள், அது எனும் மூவகைப் பகுப்பினவாயிருக்கின்றன. ஒவ்வொரு பகுப்பும் பலவேறு வகைப்பட்டிருக்கின்றன. பலவேறு வகைப்பட்ட அவயவப் பகுப்புடைய இவ்வுலகம் அறிவுடையதாயிருக்கவும் இல்லை. உலகத்தை ஐயந்திரிபற உண்மையாய்க் காண்கின்றோம். ஆகவே கண்ணறிவு கொண்டு உலகத்தை ஆராய நுழைந்தால் அஃது பலவேறு வகையாய் அவன், அவள், அது எனும் அவயவப் பகுப்புடையதாய், கண்ணுக்குப் புலப்படுவதாய், அறியாமை உடையதாய்த் தோன்றுகின்றது. ஒரு தன்மைத்தாயிராமல் பல்வேறு வகையாய் மூன்று அவயவப் பகுப்புடைமையின் உலகம் இயற்கையன்று, நித்தியமன்று, என்பதும், அறிவற்ற பொருளாதலின், தானே தொழிற்படும் சக்தியின்றி ஒருவனால் தொழிற்பட வேண்டுதலின் அது செயப்படுபொருள் என்பதும்; செயப்படுபொருளாய்க் கண்ணால் காணப்படுவதால் அழியும் பொருள் என்பதும் நன்றாய் விளங்குகின்றன.

செயப்படுபொருளாகிய உலகத்திற்குக் கர்த்தா ஒருவன் இருக்க வேண்டும். அவன் நம்மில் ஒருவனன்று, ஏனெனில் நம்மில் யாருக்கும் இவ்வுலகத்தில் ஒரு சிறு பாகத்தையேனும் உண்டு பண்ணிக் கொள்ள ஆற்றலில்லை; நம் உடலில் ஒரு சிறு அவயவத்தையும் உண்டு பண்ணிக் கொள்ள நமக்கு ஆற்றலில்லை என்றால் இப்பெரிய அதி விசித்திரமான உலகத்திற்கு நாம் எங்ஙனம் தலைவராகக் கூடும். ஆகவே உலக கர்த்தா உயிர் வர்க்கங்களில் ஒருவனல்லன். அவனைத் தேடப் புகின் அவன் உலகத்தைக் கடந்திருப்பான்—குடத்தைச் செய்த குயவன் குடத்தைக் கடந்திருப்பது போல். அதனால் அவன் கடவுள். அவன் உலகமாகிய ஐந்து பூதங்களில் ஒன்றல்லன், அவை ஒன்று சேர்ந்த உலகமுமல்லன், உலகத்திலுள்ள உயிர் வர்க்கங்களிலும் ஒன்றல்லன். எனினும் அவன் நம்மால் ஆராயத் தக்கவன். உலகத்தைக் கொண்டு ஆராய்ந்தால் கொஞ்சம் தோன்றுவான். இப்படி ஆராய்ந்து அறிந்து அநுபவித்த பெரியார்களின் வாக்கு இதற்குச் சான்றாயிருக்கின்றது.

‘மண்ணல்லை விண்ணல்லை வலயமல்லை
மலையல்லை கடலல்லை வாயுவல்லை
எண்ணல்லை யெழுத்தல்லை யெரியுமல்லை
யிரவல்லை பகலல்லை யாவுமல்லை
பெண்ணல்லை யாணல்லை பேடல்லை
பிறிதல்லை யானும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயையல்லை
உணர்வரிய ஒற்றியூருடைய கோவே’
—அப்பர்.

“யாவையும் எவருந் தானாய்
அவரவர் சமயந்தோறும்
தோய்விலன் புலனைந்துக்கும்
சொலப்படான் உணர்வின் மூர்த்தி
ஆவிசேர் உயிரி னுள்ளால்
ஆதுமோர் பற்றிலாத
பாவனை யதனைக்கூடில்
அவனையுங் கூடலாமே”
—நம்மாழ்வார்.

“பெரியாய் நீயே” என்றமையால் அவன் பெருமையுடையவனென்பது விளங்கும்பெருமையுடையதைத்தான் நாம் பேச வேண்டும். சிறுமையுடையதைப் பேசின் அச்சிறுமை நம்மையே வந்தடையும்; நாம் அறிவது தோன்றுவதில்லை. இறப்பு பிறப்புகள் நிகழ்கின்றனவே யெனின் இறத்தல் அழிதலல்ல: இறத்தல் எனுஞ்சொல் முடிதல் தாண்டுதல் எனப் பொருள்படும்: இறக்கின்றோம் என்றால் நாம் ஒன்றைத் தாண்டுகின்றோம் என்பதாகும். அதாவது தூல உடலைத் தாண்டுகின்றோம். “தூல உடல் அவினது தோல் என்ன நீங்கவே” என்றார் சிவஞான முனிவர் அகிலாண்டேஸ்வரியம்மை பதிகத்தில். உலகமோ அழியுந்தன்மை யுடையது. உலகத்தை ஆராயப் புகுந்து, அது அழியுந் தன்மை யுடையது, முடிவில் ஒரு பொருளும் இல்லை யென்று கண்டால் மலை கல்லியும் எலியும் அகப்படவில்லை என்பது போல் நம் ஆராய்ச்சி பயனற்றதாகி விடுமல்லவா! இப்படி அயர்வதற்கு இடந்தராது அப்பருடைய உறுதியான வாக்கு. “உள்நல்லை நல்லார்க்கு” என்று அது உணர்த்துகிறது. நம்மாழ்வாரும் “உணர்வின் மூர்த்தி”, என்றோதுகின்றார். கடவுள் நல்லவர்கள் உள்ளத்தில் இன்பந்தருபவனாயிருக்கின்றான் அவனை ஆராய ஆராய இன்பமுண்டாகும். ஆராயாதிருக்க இருக்கத் துன்பமேஉண்டாகும். ஆராய்ச்சியினால் மட்டுமே அவ் வின்பப் பொருளை அநுபவிக்க முடியும்!

இனிவடமொழி நூல்களில்சென்று ஆராயுமிடத்து ஸ்வேதாஸ்வதரம் 5 வது பாகம் 10 வது ஸ்லோகம் ‘நீ அவன் அவள் அதுவல்ல’ என்று கடவுளைப் பேசுகிறது. தைத்ரீயம் “எந்த இடத்திலிருந்து உன்னால் காணப்படுகின்ற இந்தப் பூதங்கள் தோன்றுகின்றன, எதனாலே அது காக்கப் படுகிறதோ, எதில் இவை இலயம் அடைகிறதோ, அந்தப் பொருளை நீ அறிய முயல்” என்று கூறுகிறது. வியாச சூத்திரம் (2வது சூ.) “எங்கேயிருந்து உலகங்கள் தோன்றிற்றோ அது” என்றமையால் உலக காரணன் கடவுள் என்பது விளங்குகின்றது. “ஆன்மாவின் அறிவு சுத்தப்படுவது ஈஸ்வரனை அறிவதால்” என்றார் நீலகண்ட சிவாசாரியார். நாம் அறிவையும் அறியாமையையும் கூடியவராய் இருக்கின்றோம். அறியாமையால் துக்கமுறுகின்றோம். அறிவு சுத்தப்படக் கடவுளை ஆராய வேண்டும். ஒரு மரம், அதில் ஒரு புருஷன் மோகனை ஈஸ்வரனுமில்லாமையால் அடிமையாயிருப்பதால், எப்போதும் துக்கமுடையவனாயிருக்கிறான்; தன்னிடத்திலேயே யிருக்கிற ஈஸ்வரனை நினைத்தால் மோகம் நீங்கினவனாவான்” என்ற அபிப்பிராயத்தை முண்டகம் தெரிவிக்கிறது. ஈசாவாசியமும் இதே அபிப்பிராயப் படுகிறது. நமக்குள்ள இயற்கை யறிவும் பல நூல்கள் கற்றதன் பயனாய் வந்த அறிவும் குருமொழியால் உண்டான

(தொடர்ச்சி 7 ம் பக்கம்)

---

திருக்கச்சியேகம்பம்—
—பண்—காந்தாரம்

ஆகம்பத் தரவணையா னயனறி
தற் கரியானைப்
பாகம்பெ ணண்பாக மாய்நின்ற
பசுபதியை
மாகம்ப மறையோது மிறையானை மதிட்கச்சி
ஏகம்ப மேயானை யென்மனத்
தே வைத்தேனே

—அப்பர் சுவாமிகள்

---

## பல பிரச்னைகளில் ஜவஹர் கருத்து

### நிருபர்களின் கேள்விக்குப் பதில்

காங்கிரஸ் தலைவரான பண்டித ஜவஹர்லால்நேரு சமீபத்தில் பம்பாய்க்கு விஜயம் செய்திருந்தபோது காங்கிரஸ் மாளிகையில் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி யளித்தார். அப்போது அவர்கள் அவரைப் பல விதமான கேள்விகளைக் கேட்டனர். அவர் எல்லாவற்றிற்கும் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். பண்டிதர் காங்கிரசின் தலைவராக இருப்பதுடன் இந்தியாவின் முடிசூடா மன்னராகவும் இருப்பதால் பல விஷயங்கள் சம்பந்தமான அவரது அபிப்பிராயத்தை அனைவரும் அறிய வேண்டியது அவசியமாதலால் அந்த அபிப்பிராயங்களை இதனடியில் சுருக்கமாகத் தருகின்றோம்:—

#### சம்பளம் பற்றிய திட்டம்

காங்கிரஸ் ஆட்சியில் சம்பளப் பிரச்னை என்ன என்பது பற்றி அவர் கூறியதாவது:—இதில் கராச்சித் தீர்மானம் தெளிவாக இருக்கிறது. காங்கிரஸ் காரியக்கமிட்டி இப்போது முடிவை மாற்றமுடியாது. அவ்விதம் செய்யக் காரியக் கமிட்டிக்கு எவ்வித விருப்பமும் இல்லை. மற்ற அரசாங்க ஊழியர் சம்பளத்தில் வெட்டு ஏற்படுத்துவது மட்டும் காங்கிரஸ் மந்திரிகள் உத்தேசமல்ல. பிரிட்டிஷ் கவர்மெண்டோ அல்லது பழைய மந்திரிகளோ சமயத்தில் 100க்கு 10 அல்லது 15 விகிதம் குறைவேற்படுத்துவது பற்றியே கவனித்தார். ஆனால் காங்கிரசுக்கு இதில் முற்றிலும் வேறுபட்ட அபிப்பிராயமுண்டு. இந்தியாவின் ஏழ்மை நிலைக்கு அனுகூலமாகச் சம்பளம் இருக்கவேண்டுமென்பது காங்கிரசின் நோக்கமாகும் தேசத்தில் சராசரி பொருளாதாரம் மிகவும் தாழ்ந்து கிடக்கிறது. நாலாயிரம் ஐயாயிரம் என்று ஏராளமாகச் சம்பளத்தை வாரிக் கொடுப்பதைத் தேசம் சகிக்க முடியாது. இந்தியாவை விடப் பொருளாதாரத்தில் மேம்பட்டுள்ள ஜப்பான் முதலிய இதரதேசங்களில 500 ரூபாய்க்கு மேற் சம்பளம் பெறும் உத்தியோகஸ்தர்கள் மிகக் குறைவாகும். இந்தியாவில் சாதாரண சிப்பாய் அல்லது கொன்ஸ்டபிளுக்கும், அந்த இலாகாத் தலைவருக்கு முள்ள சம்பள ஏற்றத்தாழ்வு மிக அதிகமாக இருக்கிறது. ஜப்பானில் ஒரு பொலிஸ்காரனுக்குச் சம்பளம் 60 அல்லது70 ரூபாய் இந்தியாவிலோ 17 அல்லது 20 தான். ஜப்பானில் பொலிஸ் இலாகாத் தலைவருக்கு 500 ரூபாய் தான் சம்பளம். இந்தியாவிலோ 2500 அல்லது மூவாயிரம் ரூபாயாக இருக்கிறது. இத்தகைய ஏற்றத்தாழ்வைப் போக்க வேண்டும். சம்பளத்தை நிர்ணயிப்பதில் இந்தியாவின் ஏழ்மைத் தனத்தை முக்கியமாகக் கவனிக்கவேண்டும். காங்கிரஸ் மந்திரிகளுக்கு இது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. ஏனெனின். இதில் அகில இந்தியத்தன்மை வேறு இருக்கிறது. ஆகவே அவர்கள் இப்போது இதில் தற்காலிகமாக ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டியிருக்கிறது.

#### காங்கிரஸ் மந்திரிகளைக் கண்டிப்பதா?

காங்கிரஸ் மந்திரிகளைக் கண்டிப்பது சம்பந்தமாக அவர் அறிவித்ததாவது:— காங்கிரஸ் மந்திரிகளை வலுப்படுத்துவதற்கான சிறந்த மார்க்கம் அவர்களைத் துர்ப்பலப் படுத்துவதல்ல. மந்திரிகளைக் கண்டிக்கவே கூடாது என்பது என் கருத்தல்ல. அவ்விதம் கூறுவது சுத்த ஆபாசமாகும். ஆனால் கண்டனங்களில் இரண்டுவிதமுண்டு. விரோதபாவத்தால் கண்டிப்பது ஒன்று. இது கெடுதலாகவே முடியும். மந்திரிகளை இது துர்ப்பலப்படுத்தக் கூடும். மற்றொன்று உருவான வழியில் கண்டனங்கள் வெளியிடுவதாகும் இது வரவேற்கக்கூடியதே. இது மந்திரிகளுக்கு யோசனை கூறுவது போலாகும். மந்திரிகள் நமக்குப் பிடிக்கவில்லையாயின் அவர்களுக்கு எதிரான கண்டனங்களை வெளியிடுவது கூடாது. இவர்களை வேண்டுமாயின் நீக்க முற்படலாம். தோழர் முறையில் உதவி புரியும் நோக்கத்துடனேயே கண்டிக்க வேண்டும். காங்கிரஸ் மந்திரிகள் வந்த மறு தினமே அவர்களைக் கண்டிக்க முன் வரலாகாது. அவர்கள் அதிகாரத்துக்கு வந்து இன்னும் ஒரு மாதமும் ஆகவில்லை. திடீரென இவர்கள் அதிசயங்களை உண்டுபண்ணி விட முடியாது.

#### தலைவரைத் தேர்ந்தெடுக்கும் விஷயம்

தலைவரைத் தேர்ந்தெடுக்கும் விஷயமாக அவர் நிருபர்களின் கேள்விக்குப் பதில் அளித்ததாவது:—காங்கிரஸ் தலைவர் கடமை மகத்தானதாக இருக்கிறது. காங்கிரஸ் தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் வகுப்பு உணர்ச்சி கூடாது. ஹிந்து அல்லாத ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பதை நான் வரவேற்பேன். ஆனால் முஸ்லிம்களைத் திருப்தி செய்வதற்காக ஒரு முஸ்லிமைத் தேர்ந்தெடுப்பதென்றால் அதற்கு நான் வாக்களிக்க மாட்டேன். தகுதியுள்ளவர் என்னும் காரணத்திற்காக ஒரு முஸ்லிம் தலைவருக்கு வாக்களிக்க நான் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறேன். காங்கிரஸ் அமைப்புப்படி காரியக்

(தொடர்ச் 2-ம் பக்கம்)

# சீனப்போர்க்களத்துச் செய்திகள்

## சர்வதேசக் குடியேற்றப் பகுதிமீது வெடிகுண்டுகள்

## ஜப்பானியரின் முன்னேற்றம்

## 40 சீன விமானங்கள் சுடப்பட்டன

ஷாங்கை ஆக 15—

சீன விமானங்களால் ஜப்பான் கடற்படை தாக்கப்பட்டதற்குப் பழிக்குப் பழிவாங்கும் பொருட்டு ஜப்பானிய விமானங்கள் கியாங்ஸி செக்கியாங் மாகாணங்களிலுள்ள சீன விமானத் தளங்களை வெடிகுண்டெறிந்து கடுமையாகத் தாக்கினர். 40-க்கு அதிகமான சீன விமானங்களை நாசமாக்கிவிட்டதாக ஜப்பானியர் கூறிக்கொள்கின்றனர்.

### மணத்திற்கு முன் மரணம்

ஷாங்கை ஆக 14—

சர்வதேசக் குடியேற்றப் பகுதியில் அந்நிய நாட்டவர்கள் பலர் சேதமடைந்தனர்.

ருஷியர்களான ஸ்ரீமதி. பெவின்ஸ்கி டெவிபோன் பெண் செல்வி ரோஸ் நாஷ்டாவிவிஸ்கி, துப்பறிவாளன் காராட்ஸ்கி, ஆகியோர் சேதமடைந்தனர். செல்வி ரோஸ் நாஷ்டாவிவிஸ்கி விரைவில் ஒரு கர்னலைக் கலியாணம் செய்து கொள்வதாக விருந்தாள்.

மற்றும் திரு. எச். எஸ். ஹொனின்பர்க் என்ற ஒரு மோட்டார்க் கார் வியாபாரியும் அவரது ருஷிய மனைவியும் "டிடி டைனமிட்" என்று அழைக்கப்பட்ட ஓர் அமெரிக்க ஸ்திரீயும் சேதமடைந்தனர்.

சர்வதேசக் குடியேற்றப் பகுதிக்குள் எவ்விதம் வெடிகுண்டு வீசப்பட்டதென்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

### பிரிட்டிஷ்மாது கொல்லப்பட்டாள்

ஷாங்கை ஆக 14—

இன்று நகர் வெடிகுண்டுகளால் தாக்கப்பட்டதால் அப்பொழுது கொல்லப்பட்டவர்களின் விபரம்:—

வட சீன "டெய்லி நியூஸின்" பிரதம பிரிட்டிஷ் அக்கவுண்டாக ஏ. டி வில்லியம், பிரின்ஸ்டன் சர்வகலாசாலையைச் சேர்ந்த அமெரிக்கப் பேராசிரியர், ரொபேட்ரீச்சாயுர் ஏகாதிபத்திய ரஸாயனக் கைத்தொழில் ஸ்தாபனத்தில் வேலை பார்த்த திரு. மாண்டேக் ஸ்மித் என்பவரும் மற்றும்ஒருபிரிட்டிஷ் மாதும் 3 அமெரிக்கரும் கொல்லப்பட்டனர். அந்தப் பிரிட்டிஷ் மாதின் அடையாளம் தெரியவில்லை. மிகப் பிரபலஸ்தர்களான அமெரிக்கப் பாதிரிகளில் ஒருவரான திரு. ப்ராங்ராவின்ஸன், அவரது மகள் ஆகியோரின் பிரேதம் ஒரு நொருங்கிய காரிற் சிதறிக் கிடக்கக் காணப்பட்டது. ஓர் அமெரிக்க ஸ்திரீயும் கொல்லப்பட்டாள். அவள் அடையாளமும் தெரியவில்லை

### அமெரிக்காவின் விண்ணப்பம்

வாஷிங்டன் ஆக 15—

ஷாங்கை நகரைப் போராட்டங்களுக்கு மத்திய ஸ்தலமாக உபயோகிக்காதிருக்கும்படி ஜப்பானிய சீன அரசாங்கங்களுக்கு அமெரிக்கா மிக உருக்கமாக விண்ணப்பித்துக் கொள்வதாக அமெரிக்க அந்நியநாட்டு மந்திரி கார்டல் ஹல் அறிவித்திருக்கிறார். இவ்வித விண்ணப்பத்தை பிரிட்டனும் செய்திருக்கிறது.

### சீன அரசாங்கத்துக்குப் பிரிட்டனின் ஆட்சேபம

நாங்கிங் ஆக 14—

ஷாங்கையிலுள்ள சர்வதேசக் குடியேற்றப்பகுதி வெடிகுண்டுகளால் தாக்கப்படுவதற்கு விரோதமாக ஆங்கிலோ பிரஞ்சு, அமெரிக்க அரசாங்கங்கள் சீன அந்நிய நாட்டுக் காரியாலயத்திற்கு ஓர் ஆட்சேபனை செய்திருக்கின்றன.

நகரிலுள்ள நாடகங்கள் உணவுச் சாலைகள் ஆகியவை மூடப்பட்டன. போர்முனையிலிருந்து வெளியேறியுள்ள சீனர்கள் நடைப்பாதைகளிற் காணப்படுகின்றனர். இன்றைய சம்பவத்தை விட இன்னும் கோரமான சம்பவங்களேற்படக் கூடுமென்று அந்நியநாட்டவர்கள் மிக மிக அஞ்சுகின்றனர்.

### ஜப்பானியர் முன்னேறுகிறார்கள்

பீப்பிங் ஆக 14—

நாள் முழுவதும் கடுமையாக மோட்டார்ப் படைகள் தாக்கியதால் ஜப்பானியர் நாங்கௌ பகுதியில் 2 மைல்கள் முன்னேறி விட்டனர்.

வங்பூ நதியின் குறுக்காகச் சீனர் பெரிய படகுகளையும் பழைய கப்பல்களையும் அமிழ்த்தி அதனால் 8 ஜப்பானிய யுத்தக் கப்பல்களின் போக்குவரத்தைத் தடைசெய்து விட்டனர்.

### 'சீனவை ஜப்பான் முறியடிக்கக் கூடும்'

ரச்பி ஆக 14—

சீனத் துருப்பினருக்கும் ஜப்பானியத் துருப்பினருக்குமிடையில்நேற்று மீண்டும் ஏற்பட்டபோராட்டங்களைத் தடை செய்யக் கூடுமென்றிருந்த நம்பிக்கையை இன்று ஷாங்கையிலிருந்து கிடைத்திருக்கும் செய்திகள் ஏமாற்றமடையும்படி செய்து விட்டன. ஷாங்கையிலுள்ள சர்வதேசக் குடியேற்றப்பகுதி பாதிக்கப்படாமலிருக்கும் பொருட்டு பிரிட்டனும் இதர அரசாங்கத்தார்களும் விசேஷ கவனம் செலுத்தி வருகின்றனர்.

தூரக் கிழக்குப்பிரதேச நெருக்கடி சம்பந்தமாக "டெயிலி ஹெரால்ட்" "மோனிங் போஸ்ற்" ஆகிய பத்திரிகைகள் சீனவும் ஜப்பானும் தற்சமயம் உண்மையில் யுத்தத்தை விரும்பவில்லையென்று தனது தலையங்கத்திற் குறிப்பிடுகின்றன.

மோனிங் போஸ்ற் மேலும் குறிப்பிடுவதாவது:—நேற்று நிகழ்ந்த சண்டைக்குக் காரணம் தெளிவாகத் தெரியவில்லை ஜப்பான் அல்லது சீன சண்டைக்குப்போக விரும்புகிறதென்றும் தெரியவில்லை. ஜப்பானுக்கும் சீனவுக்குமிடையே ஏற்படும் சண்டை ஒருவருக்கும் லாபகரமாக விருக்காது. ஜப்பான் சீனவை முறியடிக்கக் கூடும் ஆனால், அது சீனவைக் கைப்பற்றமுடியாது. சீனவும் வெற்றிகரமாக ஜப்பானை எதிர்க்கலாம் அம்முயற்சியல் அது பெரிதும் பலவீனப்பட்டுப் போகும்.

## பாம்பு தீண்டி இறந்த பாவை

### குழந்தைக்குக் குளிக்கவார்க்கச்சென்றவளுக்கு நேர்ந்தகதி

தங்காலை ஆக 13உ

குடவில்லா கிராமத்தில் கே. ஜி. கர்லினுஹாமி என்னும் மாது தனது குழந்தைகளைக் காலையில் ஸ்நானஞ் செய்விக்கக் கிணற்றுக்கு அழைத்துச் செல்லும்பொழுது அவளது வலது பாதத்தில் ஒரு நாக பாம்பு தீண்டியது. உடனே அவள் வீட்டுக்குத் திரும்பி ஆயுள்வேத வைத்தியரைக் கொண்டு சிகிச்சை செய்வித்தும், விஷம்இறங்காமையால் மரணமடைந்தாள்.

## ஹட்ஜி அலியின் சாமர்த்தியம்

### அவரது வாய் தண்ணீர்க் குழாயா!

உயிருள்ள மீன் உள்ளே செல்கிறதாம்

ஹட்ஜி அலி என்பவர் எகிப்து தேசத்தைச் சேர்ந்தவர்; இப்பொழுது லண்டனில் இருக்கிறார். ஒரு டம்ளர் பெட்ரோலை அவரிடம் கொடுங்கள். அவர் குடித்து விடுவார்; அப்புறம் அதன் மேல் நாற்பது டம்ளர் ஜலத்தையும் குடிப்பார். பிறகு அவர் தாம் குடித்த பெட்ரோலை ஒரு திரையின் மீது கக்குவார். உடனே அத்திரையில் நெருப்பு வைக்கப்படும். நெருப்பு நன்றாகப் பற்றியெரியும். உடனே அலி, வாயைத் திறந்து கொண்டு தமது வேலையைத் தொடங்குவார். நெருப்பு அணைக்கும் இயந்திரம் தண்ணீரைக் கொட்டுவது போல அவருடைய வயிற்றிலிருந்து தண்ணீர் கொட்டிக் கொண்டே இருக்கும்.

சிறந்த நிபுணர்கள் எல்லாரும் கூடினர். அலி செய்யும் தந்திரத்தைக் கண்டுபிடிக்க அவர்கள் மூளையை உடைத்துக் கொண்டார்கள். ஒன்றும் நடக்கவில்லை. எக்ஸ்ரேயும் எடுக்கப்பட்டது. அந்த இரகசியத்தை விளக்க அவர்களால் ஒன்றும் முடியவில்லை. நீங்கள் எந்த வஸ்து வைக் கொடுத்தாலும் அலி அதைத் தம் வயிற்றுக்குள் வைத்திருந்து வேண்டியபோது எடுத்துக் கொடுக்கிறார்.

என்ன ஆச்சரியம்! எப்படிச் செய்கிறார் அவர்?

"எனக்குப் பத்து வயது. அப்பொழுது நான் ஒரு நாள் நைல் நதியில் நீந்திக் கொண்டிருந்தேன். நீந்திக்கொண்டிருக்கும்பொழுது ஒரு மீனை விழுங்கி விட்டேன். உடனே அந்த மீனையும் கக்கி விட்டேன். அதில் துளிகூட எனக்குச் சிரமமே ஏற்படவில்லை. எனது தோழர்கள் அதியாச்சரியமடைந்தார்கள்; மறுபடியும் அதையே செய்யுமாறு சொன்னார்கள். நானும் செய்தேன். அது முதல் இந்தச் சக்தியை நான் அபிவிருத்தி செய்து வந்தேன்" என்று அவர் சொல்கிறார்.

அமெரிக்க ராக்பெல்லர் சங்கத்தார் அவருக்கு ஐந்து லக்ஷம் ரூபாய் அளித்திருக்கிறார். எதற்கு? அவர் செத்த பிறகு உடலை எடுத்துக்கொள்வதற்காக.

[பல வருஷங்களுக்கு முன்பு தஞ்சாவூர் ஜில்லாவில் ஒரு நைஷ்டிகப் பிரம்மசாரி இருந்தாராம். அவர் ஸ்படிக லிங்கம் ஒன்றை வயிற்றுக்குள் வைத்திருந்தாராம், யாராவது அவருக்கு பிக்ஷை செய்தால் சாப்பிடுவதன் முன் 'ஏவ்' என்று அவர் சப்திப்பாராம். உடனே வயிற்றுக்குள்ளிருக்கும் ஸ்படிக லிங்கம் வாய்க்குள் வருமாம். அதை எடுத்து இலையில் வைத்து நைவேத்தியம் செய்வாராம். சாப்பிட்டபின் லிங்கத்தையும் விழுங்கி விடுவாராம். இக்கதை இப்பொழுதும் தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள குக்கிராமங்களிலே சொல்லப்படுகிறது]

## 'நாயை ஊரைவிட்டுத் துரத்து'

நியூயார்ச் நகருக்குள் இன்னும் பன்னிரண்டு வருஷங்களுக்கு நாய்கள் நுழைதல் கூடாது. அங்கே இப்பொழுதுள்ள நாய்களையெல்லாம் விரட்டி விட வேண்டும். இது அந்நகர நீதிபதியின் உத்தரவு. நாய்மீது ஆசை கொண்டவர்கள் நாயை விடமாட்டோமென்கிறார்கள். பூனை மீது அன்பு கொண்டவர் செயலை ஆதரிக்கின்றனர். ஏனென்றால் இன்று நாய்க்கு வந்த கதி நாளைக்குத் தங்கள் பூனைக்கும் வந்து விடப்போகிறதே யென்று அவர்களுக்குப் பயம். ஆமாம் நாய்களை மாத்திரம் ஊரை விட்டு விரட்டுவானேன்? அதற்கு மூன்று காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று அவை நோய் பரப்புகின்றன என்பது. இரண்டாவதாக அவை அருகலருக்கத் தக்க செயல் புரிகின்றன என்பது. மூன்றாவது இவற்றால் பொதுமக்களுக்கு ஏராளமான பணச்செலவு என்பது.

நியூயார்க் பெண்களுக்கு மிகுந்த கோபம். நியூயார்க் பட்டினமே கோபாவேசங் கொண்டிருக்கிறது.

## பல பிரச்னைகளில் ஜவஹர் கருத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கமிட்டிக்கு இதில் எவ்வித அதிகாரமும் கிடையாது. தலைவர் தேர்தல் சம்பந்தமாக இரு காரியங்கள் நடைபெற வேண்டும். பிரதிநிதிகள் நியமனம், பிறகு நியமனமானவர்களுக்கு வாக்களிப்பது. இதில் காரியக்கமிட்டி எவர் பெயரையும் குறிப்பிட்டுத் தெரிந்தெடுக்குமாறு சொல்வதற்கில்லை.

### காங்கிரசும் பலாத்காரமும்

அஹிம்சா முறையைப் பின்பற்றியிருக்கும் காங்கிரஸ் மந்திரிகள் கான்பூரில் வேலைநிறுத்தக் காரர்கள் மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததை அனுமதித்துச் சரியா என்று நிருபர்கள் கேட்டதற்கு பண்டிதர் கூறியதாவது:—காங்கிரஸ் சம்பந்தப்பட்ட வரையில் அஹிம்சையே அதன் திட்டமான கொள்கையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அஹிம்சா முறையில் சில சமயங்களில் கஷ்டங்கள் ஏற்படக் கூடும். இதில் முக்கிய உதாரணம் பலாத்காரத்துடன் வெளிநாட்டுப் படையெடுப்பு ஏற்படுவதாகும். இவ்வாறு பலாத்காரப் படையெடுப்பு ஏற்பட்டால் நாம் அஹிம்சையைப் பின்பற்றினாலுங்கூட இதைப் பலத்தைக் கொண்டே நாம் சமாளிக்க வேண்டும் என்பது என் அபிப்பிராயம். ஆகவே அஹிம்சா முறையைப் பின் பற்றிய அரசாங்கங்களும் ஆயுதங்களை வைத்திருக்க வேண்டியது அவசியமாகிறது. இது ஒரு தெளிவான பிரச்னையேயாகும். அடுத்த படியாக மற்றொரு உதாரணம் கூறுகிறேன். காங்கிரஸ் மாகாணத்தில் பலாத்காரப் புரட்சி ஏற்படுவதாக வைத்துக் கொள்வோம். எதிர்ப்பை அடக்கச் செய்யப்படும் எல்லா முயற்சிகளும் பயன்படாமற் போனால் பலாத்காரப்புரட்சி இயக்கத்தைப் பலாத்காரத்தைக்கொண்டே அடக்கவேண்டி வரும். ஜனக் கூட்டம், வேலைநிறுத்தக் காரர்கள் அல்லது வேறு காலிக் கூட்டத்தார் பலாத்காரமாகக் கெடுதி செய்வதானால் அந்த நிலைமையை எந்த அரசாங்கமும் சும்மாவிட்டு வைப்பதற்கில்லை. நகரம் முழுதும் ஆபத்திற்குட்பட்டு அமைதியும் குலையும்படி நேரிடாமல் அதை அடக்கியாகவேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பலாத்காரத்தை உபயோகிக்காமல் முடியுமா? கான்பூரில் என்ன நடந்ததென்பது எனக்குத் தெரியாது. பத்திரிகைச் செய்தியைப் பார்த்தால் வேலை நிறுத்தக்காரர்கள் பலாத்காரத்தில் இறங்கியதாகத்தெரிகிறது. ஆதலால் முழு விபரமும் தெரியாமல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. பலாத்காரத்தை உபயோகிப்பது அநாகரிகம்தான். தகராறுகளைத் தீர்ப்பதில் பலாத்காரத்தை உபயோகிப்பது காட்டுமிராண்டித்தனமே. கிரமமாகப் பலாத்காரமென்பதையே ராஜ்யத்தைவிட்டு ஒழிப்பதுதான் நமது லக்ஷியமாக இருக்க வேண்டும்.

### ஆடம்பரம் ஒழியவேண்டியதே

ஆடம்பரம் கூடாதென்பது பற்றி ஜவஹர்லால் நிருபர்களிடம் கூறியதாவது:—மனிதன் தனது தேவைகள் எல்லாவற்றையும் துறந்துவிட முடியாது. ஆனால் அதற்காக மிகுந்த ஆடம்பரத்தில் மூழ்குவதென்பதும் சுத்த ஆபாசமாகும். தேசமக்களில் பாதிப்பேருக்குமேல் உடுக்க உடையே இல்லாதபோது நாம் பட்டுப் பீதாம்பரங்களில் மூழ்குவதுஅறிவுடைமையாகாது. இப்போது இரு பிரிவினர்களுக்குள்ளாக மிகுந்த ஏற்றத்தாழ்வு இருப்பது தற்கால சமூக அமைப்பின் பயனாகும். ஒவ்வொருவரும் எளிய வாழ்க்கையை நடத்த வேண்டும். ராஜாக்களும் அரசர்களும் கூடாதென்பதே எனது அபிப்பிராயம். இவர்கள் சட்ட வரம்புக்குட்பட்டவர்களாக இருந்தாலும் சரிதான். இவர்கள் நடத்திவரும் ராஜ வாழ்க்கை மிகக் கெடுதலாகும்.

### சமதர்மக்கட்சி தேவையா?

இந்தியா வெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து காங்கிரஸ் தலைவர் பெற்றுள்ள அனுபவத்திலிருந்து காங்கிரசுக்குள் ஒரு சமதர்மக்கட்சி இருக்க வேண்டியது அவசியம் உண்டா என்க் கேட்டதற்கு அவர் பொதுவான ரீதியில் கூறியதாவது:—எந்தப் பெரிய ஸ்தாபனமும் குறுகியமனோபாவத்துடன் இருப்பதற்கில்லை. காங்கிரசுக்குள்ளாக ஒரு கோஷ்டியிருப்பது கூடாதெனக் காங்கிரஸ் கூறுவதற்கில்லை. இதில் முக்கியமாக வேண்டியது என்னவென்றால் செய்கையில் ஒற்றுமை இருக்க வேண்டியதுதான்.

## சைவபரிபாலன சபை

### 48-ம் ஆண்டு நிறைவு விழா

சைவபரிபாலன சபையின் 48ம் ஆண்டு நிறைவுவிழாப் பொதுக்கூட்டம் நிகழும் ஆகஸ்டு மீ 21-ந் திகதி சனிக்கிழமை மாலை ஐந்து மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்திற் கூடும்.

## லேடி கோல்டிகொற் பக்ஸ்டனில் விடுமுறையைக் கழிக்கிறார்

இலங்கையின் புதிய தேசாதிபதியின் மனைவி லேடி கோல்டிகொற் தற்போது பக்ஸ்டனில் பாலஸ் ஹோற்றலில் விடுமுறையைக் கழிக்கின்றார்.



## எச்சரிக்கை!

### புண்ணியசீலர்கள் அவதானிக்க வேண்டியது:

வண்-கிழக்கு ஆனைப்பந்தியடியில் வசிக்கும் சின்னத்தம்பி-பொன்னையா என்பவர், ஆனைப்பந்தியடி இளைஞராகிய எங்களுடன்சேர்ந்து, நல்லூர்க் கந்தசுவாமி கோயில் திருவிழாக்காலத்தில் ஆனைப்பந்தியடிச் சந்தியில் வருடந்தோறும் தண்ணீர்ப்பந்தல் வைத்து நடத்தி வந்தார். ஆனால் இந்த வருடம் திருவிழா தொடங்கிய பின்னும் குறித்த பொன்னையா என்பவர் குறித்த இடத்திலேனும் வேறெவ்விடத்திலேனும் தண்ணீர்ப் பந்தல் வைத்து நடாத்துதற்கு எவ்வகையான முயற்சியுஞ் செய்யவில்லை; இதனால் நாங்களே இப்பொழுது இத்தருமத்தைச் செய்யத்தொடங்கியிருக்கிறோம். இப்படியெல்லாமிருத்தலால் குறித்த பொன்னையாவிடம் இத்தரும விஷயமாக ஒரு சதமேனும் கொடுக்க வேண்டாமென்று எல்லா அன்பர்களுக்கும் இதனால் விளம்பரப்படுத்துகிறோம்.

ச. இ. தனயசிங்கம்
த. தருமலிங்கம்
கு. முத்துச்சாமி
(மற்றும் பல இளைஞரும்)

Mis 95 12,19,23-8-37



## ஆண்டாள் ரதம் அசையவில்லை

### காங்கிரஸ் கொடி கட்ட ஜனங்களின் வற்புறுத்தல்

விருதுநகர் ஆக 10—

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் ஆடிப்பூர உற்சவம் நடைபெற்று வருகிறது. சென்ற வியாழக்கிழமை 5ம் திருநாளன்று தேரின் உச்சிக்குடங்கையில் தேசியக்கொடி கட்ட வேண்டுமென்று பொது ஜனங்கள் எவ்வளவு மன்றாடியும் மேற்படி கோயில் தருமகர்த்தர் ஸ்ரீமான் தாத்தம்மசெட்டியார் பிடிவாதமாக அதை மறுத்தாராம். வெறும் மஞ்சள் நிறத்தாள் வேண்டுமென்றால் கட்டிக்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்துள்ளாராம். நேற்று ரதம் இழுக்கவேண்டிய நாள். கதர்க்கொடி கட்டினால் தான் இழுப்போமென்று பொது ஜனங்கள் உறுதியுடனிருக்கிறார்கள். தேரும் நின்ற இடத்திலேயே நின்றது. நகரெங்கும் இதே பேச்சாக இருக்கிறது.

# விடை ஊரும் விமலன்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவும் ஆகிய இவ்வனைவிருந்தும், ஒன்றாத தப்பென்று தெரிந்தும் அதை விடாமலிருப்பது மோகமாகும். வாசனை விளாம் பழத்தைக் காட்டி விடுவதுபோல் மோகம் ஆணவ மல உண்மையைக் காட்டி விடுகிறது.

ஆணவம், கர்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் பதின்மூன்று வகையாக வேலை செய்கின்றன. மோகம், மதம், இராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் ஆகிய ஏழும் ஆணவமல காரியம். மோகம் எது என்பது முன்னர்க் கூறப்பட்டது. தன்னைப் புகழ்ந்து கொள்ளுதல் மதமாகும். கிடைக்காத பொருளில் ஆசை கொள்ளுதல் இராகம். கிடைத்த பொருள் பிரிந்ததின் காரணமாகப் படும் துக்கம் கவலை. இறப்பை நோக்கி உற்றார் உறவினரும் பிரிய நேரிடும் என்று நினைந்து வருந்துதல் தாபம். இறந்தாரை நினைத்து உயிரின் அறிவை இழந்து உடலும் இளைத்தல் வாட்டம். உலகத்தில் எல்லாம் வினைவழியாய் நிகழ்கின்றது என்பதை மறந்து, தன்னால் நிகழ்கிறது என்றும், தான் பிறருக்கு நன்மை செய்ததாகவும், தான் பிறருக்குத் தீமை செய்ததாகவும் நினைத்தல் விசித்திரம். இன்ப துன்ப உணர்ச்சி கர்மமல காரியம். நமக்குக் கிடைத்த உடம்பு அதிலுள்ள மனம் நாம் இருக்கும் இடம் அநுபவிக்கும் போகப் பொருள்கள் மாயமல காரியம். ஆகவே மூன்று மலங்களும் பதின்மூன்றுவகையாக வேலை செய்கின்றன. நம்முடைய அறியாமை இப் பதின்மூன்று வகையாயிருக்கின்றது.

இப் பதின்மூன்றும் நம்மால் ஆராயப் படும் பொருளாகிய கடவுளுக்குக் கிடையாது. அப்பொருள் அறியாமை பொருந்திய நம் மனத்தைச் சுத்தப் படுத்தித் துக்கத்தைப் போக்கி இன்பத்தைத் தருவது. "சிவபெருமானாகிய கடவுளை விமலன், நமக்கு மங்களத்தைச் செய்கிறவன், நாம் மற்றெல்லாவற்றையும் நீக்கி விட்டு அவனைத் தியானிக்க வேண்டும்" என்கிற அபிப்பிராயத்தை அதர்வசிகை என்னும் உபநிஷத் தெரிவிக்கிறது; எனவே அவன் பதின்மூன்று வகையாக வேலை செய்யும் மலங்களினின்றும் நீங்கினவன். மலம் அநாதியே இல்லாமையின் சிவன்.

'நிறைமலம் அநாதியின் நீங்கிநிற்றலின்
அறைகுவர் சிவனென அறிவின் மேலவர்'

என்றார் சிவஞான முனிவர். நம்முடைய மலங்கள் கழிய நாம் மலமில்லாதவனை — விமலனை — தியானிக்க வேண்டும்.

எவன் தன் ஆன்மாவில் உள்ள கடவுளைப் பார்த்தானோ அவன்தான் தீரன் என்று கடோபநிஷத் பேசுகிறது. அக் கடவுள் தூல சரீரத்திலும் (தூணிலும்) சூக்கும சரீரத்திலும் (துரும்பிலும்) இருப்பான். துக்கத்தை அடைத்து வைத்திருப்பவன் துக்கத்தினின்றும் எப்படி நீங்குகிறதில்லையோ அதுபோல் கடவுள் உள்ளேயிருந்தால் மட்டுமே துன்பம் போவதில்லை. துக்கத்தை வெளியில் கொட்டி ஆற்றி விட்டவன் எப்படி அதனால் துன்புறுவதில்லையோ அதுபோல் உள்ளிருக்கும் கடவுள் வெளியில் வந்தால்தான் உயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் அடையும். "ஆவுறு பிணி கெட ஆவின்பால் கறந்து ஆவினுக் கூட்டல்போல்" உள்ளிருக்கும் கடவுளை வெளிவரச் செய்து மறுபடியும் உள்ளே போகச் செய்தால் தான் நமக்கு இன்பம் கிடைக்கும்.

"என்னிலாரு மெனக்கினி யாரில்லை
என்னிலும்மினியானொருவ னுளன்
என்னுளேயுயிர்ப்பாய்ப்புறம்போந்து புக்
கென்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே"

என்றார் நாவுக்கரசர். உள்ளிருக்கும் கடவுளை வெளிவரச் செய்து மறுபடியும் உள்ளே நிறுத்தி வைக்கும் அறிவும் ஆற்றலும் மலத்தால் கட்டுண்டுள்ள உயிர்களாகிய நமக்கு இல்லை. ஆகையால் கருணாமூர்த்தியாகிய கடவுள் உயிர்கள்படும் துன்பத்திற்கிரங்கி அவரே திருமேனி தாங்கி வெளிவருகின்றார். அவர் கொள்ளும் திருமேனி கர்மத்தாலன்று கருணையினாலாகும். "அருளால் மேனி சாத்திய" என்றார் ஒரு பெரியார். "நந்தம் கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு" என்றது சித்தியார். கருணை தயை கிருபை உமை என்பன ஒரே பொருளைக் குறிப்பன. 'உமையலா துருவமில்லை" என்னும் அப்பர் வாக்கை நோக்கவும்.

கருணையினால் கடவுள் வடிவங் கொள்ளும்போது முற்றறிவுடையவனாகலின் உயிர்களின் பக்குவத் தன்மைக்குத் தக்கவாறு ஒன்பது வகைத் திருமேனிகள் கொள்ளுகின்றான். நாதம் விந்து சத்தி சிவம் எனும் அருவத் திருமேனி நான்கும், இலிங்கமென்னும் அருவுருவத் திருமேனி ஒன்றும், பிரமன் விஷ்ணு உருத்திரன் மகேஸ்வரன் எனும் உருவத் திருமேனி நான்கும் ஆக ஒன்பது வடிவங்கள் கொள்கின்றான். பிரமனாய்ப் படைத்தும் விஷ்ணுவாய்க் காத்தும் உருத்திரனாய் ஒடுக்கியும் மகேஸ்வரனாய் மறைத்தும் நாத விந்து சத்தி சிவமாய் அருளியும் ஐந்தொழிலை இயற்றுகின்றான். நிஷ்கிரியத்திற்கு அருவுருவத் திருமேனி கொள்கிறான். இவ் வொன்பது வடிவங்களாயும் இவற்றைக் கடந்தும் அவன் இருக்கின்றான்.

கடவுள் கொள்ளும் உருவத் திருமேனிகள் போகவடிவம் கோரவடிவம் யோகவடிவம் என மூவகைப்படும். உயிர்கள் உலக இன்பங்களை அநுபவிக்கப் போக வடிவமும் உயிர்களின் வினைகழியக் கோரவடிவமும் உயிர்கள் முத்திபெற யோக வடிவமுங் கொள்ளுகிறார்.

"போகியா யிருந்துயிர்க்குப்
போகத்தைப் புரிதல் ஓரார்
யோகியா யோக முத்தி
உதவுதல் அதுவும் ஓரார்
வேகியா னற்போற் செய்த
வினையினை வீட்ட லோரார்
ஊகியா மூட ரெல்லாம்
உம்பரின் ஒருவன் என்பர்"

அம்மையோடு கூடியிருக்கும் வடிவம் போக வடிவம். அதிகை முதலிய வீரஸ்தானங்களில் அம்பு வில் முதலிய ஆயுதங்கள் தாங்கி இருக்கும் வடிவம் கோரவடிவம். தட்சிணாமூர்த்தி வடிவம் யோக வடிவம்.

ஈண்டுப் பேசப்படுவது போகவடிவம். "இடப்பாக மாதராளோடியைந்துயிர்க் கின்ப மென்று மடைபானும்" என்றமையால், உயிர்க்குப் போகத்தைப் புரிய இறைவன் அம்மையோடு கூடிப் போக வடிவங் கொண்டான். உலகத்தின் சாரம் தர்மம். "தர்மசாரம் இதம்ஜகத்" என்றார் வால்மீகர். தருமத்தைப் போற்றிடின் அன்பு வளரும், அன்பு முதிர அருள் விளங்கும். அன்பும் அருளும் வந்தவழி தவம் சித்திக்கும். பின் மனந் தெளியப் பெற்று உயிர் கடவுளைச் சேரும். சேரவே பிறப்பு நீங்கிப் பழமையாய்ச்சார்ந்திருக்கப்பட்ட மும்மலங்களும் கழிந்து இன்ப முண்டாகும். எனவே தருமத்தின் உயர்வை யாரே அறைய வல்லார்.

"தருமமே போற்றிடின்
அன்பு சார்ந்திடும்
அருளெனுங் குழவியு
மன்பு மாங்கவை
வருவழி தவமெனு
மாட்சி யெய்துமேல்
தெருளுறு மவ்வுயிர்ச்
சிவனைச் சேருமால்

சேர்ந்துழிப் பிறவியும்
தீரும் தொன்மையாய்ச்
சார்ந்திடு மூவகைத்
தளையும் நீங்கிடும்
பேர்ந்திட லரியதோர்
பேரின்பமதனை
ஆர்ந்திடு மதன்பரி
சறைய வல்லதோ?'

இத்தகைய தருமம் மகா சங்கார காலத்தில் தானும் அழிய நேரிடுமென்றேங்கி யோசித்து விடையுருக் கொண்டு இறைவனை யடைந்து "யானிறவாமையும் தேவரீருக்கு வாகனமாகுந் தன்மையும் மிக்க வலிமை யுடைமையும் பெற்று உயிர் வாழ அடியேனுக் கருள வேண்டும்" என்று வேண்டி நின்றது. அடைந்தோரைக் காக்கின்ற அருட்கடலாகிய இறைவர் தரும தேவதையை ஏற்றுக் கொண்டு எப்போதும் நீங்காது தன்னிடத்து ஊர்தியாய் வைத்துக் கொண்டார். அந் நாள் முதல் இறைவன் அம்மையோடும் முருகப் பெருமானோடும் தரும தேவதையாகிய விடையை ஊர்ந்து அடியார்களுக்குக் காட்சி கொடுத்தருளா நின்றனன்.

—சித்தாந்தம்

## குருபூசை

ஆடி மாதம் 29ம் திகதி வெள்ளிக்கிழமை மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை சிறப்பாக நடத்தப்பட்டது. வித்தியாசாலையின் தலைமையாசிரியராகிய பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்களால் நாயனார் சரித்திரம் பிரசங்கஞ் செய்யப்பட்டது. சபையோருக்குப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

## மத்திய மாகாண சைவ மகாசபை கண்டி

ஒப்புயர்வற்ற தனிப்பெருஞ் சிறப்பு வாய்ந்த சைவத் திருநெறியின் உயரிய உண்மைகளை யாவர்க்கும் பரப்புதலையும், செந்தமிழ்மொழியைச் சந்ததம் வளர்த்தலையுமே தமது இருபெரும் நோக்கங்களாகக் கொண்ட இந்தச் சைவ மகாசபையானது, வேண்டுவார் வேண்டுவதை ஈபவராகிய சிவபிரான் திருவருளால் தனது 12ம் ஆண்டு நிறைவுவிழா நிறைவெய்தப்பெற்றது.

மேற்படி சபையின் பன்னிரண்டாவதாண்டின் நிறைவு விழாவானது கண்டித் தமிழக மண்டபத்தில் நிகழும் ஈசுரவாண்டு ஆடித்திங்கள் முப்பதாம் நாள் (14-8-37 ல்) சனிக்கிழமை பிற்பகல் 6மணியளவில், அவைத்தலைவர் முகாந்திரம் கா. கனகநாயகமவர்கள் தலைமையின் கீழ்த் தேவாரபாராயணத்துடன் கூடியது. கூட்டம் ஆரம்பமானதும், சபையின் அமைச்சரால் பதினோராவதாண்டு நிகழ்ச்சியுரையும், 12 வது ஆண்டின் அறிக்கையுரையும், அவ்வாண்டுவரவு செலவுக்கணக்கும், வாசிக்கப்பெற்று அங்கிகாரம் பெற்றன. இத்துடன் வெளியூர் அன்பர்களின் நல்விழைவோலைகளும் படிக்கப்பெற்றன.

அவைத்தலைவர், சபைநோக்கத்தையும், அஃது ஆற்றும் தொண்டையும் எடுத்தியம்பியபின், சபைக்கென ஸ்தாபிக்கப்படும் இல்லத்தை நிறைவேற்றுவதற்கு, அன்பர்களின் பண உதவியும், ஒத்துழைப்புமே இன்றியமையாச் சாதனங்களாயுள்ளவையென்று எடுத்து இயம்புமாற்றான், அவர்களை இந் நன்முயற்சியிற் சோர்வடையாவண்ணம் மேன்மேலும் ஊக்கங்கொள்ளுமாறு செய்தனர்.

பின்னர்ச் சபையின் ஆண்டு நிறைவுக் கூட்டங்களைப்பற்றிய, 12 வது விதி சபையாரின் அங்கீகாரத்துடன் திருத்தமெய்தியதும், பகுதி வித்தியாதரிசி பிரமஸ்ரீ. J. T. சதாசிவ ஐயரவர்களாலும் திருவாளர் C. பொன்னம்பலம் B. A அவர்களாலும் முறையே "திருவாசகம்" "சைவசமயமும் கடவுள்வழிபாடும்" என்னும் விஷயங்கள்பற்றிக் கற்றோர் உவந்தேற்றுக்கொள்ளுமாறு அமிழ்தினுமினிய செந்தமிழ் நடையில் நன்மை பயக்கும் நற்போதனைகள் நிகழ்த்தினர்.

அதன்பின் மேலாண்டுத் தொழில் நிலையாளர் நியமிக்கப்பட்டார்கள்.

ஈற்றில், தலைவரும் வழக்கறிஞர் திரு. பாலசிங்கமும், காரியதரிசி A. நவரத்தினராசா அவர்களும் சொற்பொழிவாளர் நற்போதனையை வியந்து பேசியதுடன், அந்நற்போதனையின் நெறியே ஒழுகல் வேண்டுமென்ற குறிப்புரையோடு அவையோருக்குத் தமது நன்றியறிதலைக் கூறித் தமது பேச்சை முடித்துக் கொள்ளவே கூட்டம் தேவாரபாராயணத்துடன் நிறைவெய்தியது.

எடித.

## வின்ட்ஸர் கோமகனின் அதிர்ஷ்டம்

### கனடாவிலுள்ள காணியால் கோடீஸ்வரனாகக்கூடும்

லண்டன்

வின்ட்ஸர் கோமகன் வெனிஸ் நகரில் உல்லாசமாகத் தமது வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறார். அதே சமயத்தில் கனடாவில் அவருக்குச் சொந்தமான "ஈபி" காணியில் எண்ணெய்க் கிணறுகள் வெட்டுவதற்காக நிபுணர்கள் விஸ்தாரமான பரிசீலனைகளை நடத்திவருகின்றனர்.

இதனால் வின்ட்ஸர் கோமகன் ஒருவேளை பெரிய கோடீஸ்வரராகி விடவும் கூடும்.

எண்ணெய்க்கிணறு தோண்டுவதைப்பற்றிக் கனடா அரசாங்கத் தாங்க இலாகாவைச் சேர்ந்த திரு. ஜி. எஸ். ஹூம் பரிசீலனை செய்தபின் "ஈபி" பக்கமே இதற்கு மிகத் தகுந்ததிடமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார். "ஈபி" பகுதி கல்காரியிலிருந்து 50மைல் தூரத்திலிருக்கிறது.

வின்ஸர் கோமகனின் காணியிலிருந்து 5மைல் தூரத்திலுள்ள ரேணர் கணவாயிலுள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்து நாள்தோறும் 900 பீப்பா மண்டி எண்ணெய் கிடைக்கிறது.

இவர் 1919 ம் வருஷத்தில் கனடாவிற் சுற்றுப்பிரயாணஞ் செய்தபொழுது இதை வாங்கினர். இதன் விஸ்திரணம் 4000 ஏக்கர்.

உ

# விளம்பரம்

முகாந்திரம் சீ. எஸ். கே.

கந்தையாச்செட்டியார்

பிரிட்டிஸ்டோன் டயர் எஜெண்டு,

யாழ்ப்பாணம்.

புதிதாகத்தருவிக்கப்பட்ட விலைகுறைந்த சிறந்த கிருமபோன்கள் பல்வேறு தினிசுகளிலும் விலைகளிலும் கிடைக்கும்.

மேலும், ஜப்பான் சயிக்கிள் சாமான்களும் கார்ச் சாமான்களும் சயிக்கிள்களும் பிள்ளைகளின் விளையாட்டுச் சாமான்களும் (toys) சகாயமான விலைக்கு இங்கே விற்கப் பெறும்.

வியாபாரிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயமான விலைக்கு எம்மிடம் இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

(Y. 43. 1-6-37 to 31-5-38.) வி




Y 63 1-1-37to31-12-37.

# Nethrananda Thailaya

## Ceylon's Premier Curative Medicine Oil

# நேத்திரானந்த தைலம்

## இலங்கையில் மிகவும் சித்திபெற்ற மருந்து எண்ணெய்களில் இதுவே முதல்தரம்

**6 அவுன்ஸ் போத்தல் விலை ரூபா 2-50**
**தபாற் கூலி 45 சதம்**

இது சிரசில் உண்டாகும் மண்டையிடியை ஐந்து நிமிஷத்திற்குள் நீக்குவதோடு கண்ணில் உண்டாகும் சகல எரிச்சல், மங்கலான பார்வை, நீர்வடிதல், சதை படர்வு, என்னும் சகல கண்வியாதிகளையும், தலைமயிர் உதிர்தல், தலை மொட்டை, தலை சுரை, பீனிசம் என்பவைகளையும் போக்கி, தலைமயிரை நீளமாய் வளரச் செய்து பளபளப்பையுங் கொடுக்கிறது. இதை உபயோகித்தால் கண்ணாடிபோடத் தேவையில்லை. சிறியோரும் பெரியோரும் வயது வித்தியாசமின்றி உபயோகித்து வேண்டிய வேண்டிய சுகம் பெறக்கூடும்.

இலங்கையிலுள்ள கனவான்களாகிய பெரிய உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும், சீமான் சீமாட்டிகளுமான யாவரும் அச்சமின்றி உபயோகித்து இதன் அரிய குணத்தைக் கண்டிருக்கிறார்கள். வெளிவந்திருக்கும் ஏனைய போலித் தைலங்களைப் போல் இதை நினையாமல் உடனே வாங்கி உபயோகியுங்கள்.

மனிதர் முக்கியமாகத் தெரிந்து கோள்வதும், மாதர் அதிகமாகவிரும்புவதும் 35 வருடங்களாக எவராலும் அதிகமாகப் புகழப்படுவதும்,

## இந்த நேத்திரானந்த தைலமே

இந்தச் சிறந்த எண்ணெய்க்கு நீண்டபெயர் உண்டு என்று வளர்ந்து திரிகிற ஒவ்வொரு சிறு பிள்ளைக்கும் தெரியும். சிரசில் ஏற்படுவதான தலைமயக்கம், கண் எரிவு, தலைவலி, இளைநரை, தலைவழுக்கை, தலைமயிர் உதிர்தல் முதலிய எந்த வியாதிக்கும் இது ஏற்ற நிவாரணி என்று பலரும் அறிந்து உத்தரவாதஞ் செய்யப்பட்டது. நேத்திரானந்த தைலத்தினால் யாவும் சுகமாக்கப்படுகிறது. இது தற்காலத்திற் செய்யப்படும் போலித் தைலத்தைப் போலல்ல. இலங்கையிலும் பிறதேசங்களிலும் நன்கு பரீட்சிக்கப் பட்டுள்ளது.

### ஓர் உலக அதிசயம்

1937 ம் ஆண்டு ஜூன் மீ 4 ந் திகதி எழுதிய கடிதத்தில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. T. C. செல்லையாபிள்ளை பின்வருமாறு எழுதுகின்றார்:— "உங்கள் நேத்திரானந்த தைலம் அற்புதமான பலனைத் தருகின்றது. தற்போது விலைப்படும் தைலங்கள் எல்லாவற்றுள்ளும் இதுவே சிறந்ததென்பது அங்கீகரிக்கப்பட்டதொன்று" 12-6-37 இல் சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. ஆறுமுகசுவாமி பின்வருமாறு எழுதியுள்ளார்:- "உலகப் பிரசித்தி பெற்ற உங்கள் நேத்திரானந்த தைலம் எனக்கு மிகப் பெரிய நன்மையைச் செய்திருக்கிறது" போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்றன்விலை ரூபா 2-50    வேத முதலியார் - பாணந்துறை

### நேத்திரநோய்களுக் கிதினும்சிறந்தது வேறுகிடையாது

ஹேலியலாவிலுள்ள டன்ஸ்லண்ட் தோட்டச் சுப்பிரிண்டெண்ட் மிஸ்டர் G. ஜெபேட்ஸ் எழுதவதாவது:-

"சிலகாலமாக நான் உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தை உபயோகித்தேன். தலைக்கு அது மிகச் சிறந்த எண்ணெயாகும். உங்கள் தைலத்தால் நான் மிகப் பெரிய நன்மையை அடைந்துள்ளேன். போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா 2-50 வி. பி, மூலம் அனுப்புவதாயின் ரூபா. 2-95.

### கண் தொந்தரவு நிர்க்கமாக மாறியது

மாத்தளை, 'அபயக்கோன் வளவை'ச் சேர்ந்த திரு. C. D. F. அபயக்கோன் பின்வருமாறு எழுதுகின்றார்:-

அதிகமாக வாசித்ததால் எனக்கு ஏற்பட்டிருந்த கண்தொந்தரவை உங்கள் நேத்திரானந்த தைலம் நிர்க்கமாக மாற்றியது. நான் நம்பிக்கையோடு எதிர்பார்த்திருந்ததைக் காட்டிலும் மிக அதிகமான பலனை அது அளித்தது." ஆறு அவுன்ஸ் நிறையுள்ள போத்தல் ஒன்றின் விலை ரூபா 2-50. W. டேனியல் பெர்னாண்டோ வைத்திய சேகர, வேத முதலியார், பாணந்துறை, B. T. S. தலைமைக்காரியாலயம், கொறிஸ் ரோட், கொழும்பு; காஸில் ஹோட்டல், கண்டி.

### நேத்திரானந்த தைலம்

இலங்கையின் முதலாவது நோய் தீர்க்கும் மருத்துவ எண்ணெய்
பெண்களால்விரும்பிவாங்கப்படுவது ஆண்களால் நிச்சயமாகத் தேர்ந் தேடுபடுவது

பரம்பரைத் தலையிடி நோய்க்கும் ஜலதோஷம் அல்லது கபத்துக்கும் பல்வேறு நேத்திர நோய்களுக்கும் விசேஷமானது.

கேளாமலிருக்கவே அனுப்பப்பெற்ற தராதரப் பத்திரங்கள்

திரு. P. S. இளையதம்பி, கலுப்பஹாவி தோட்டம், எழுதுவதாவது:- "உங்கள் உலகப் பிரசித்தி பெற்ற நேத்திரானந்த தைலத்தின் பலன் மிகச் சிறந்தது என்று மிகச் சந்தோஷத்தோடு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்."

திரு. M. L. ஜயசிங்கி, எல்டெப் தோட்டம், எழுதுவதாவது:- மிக உக்கிரமான தலையிடி ஏற்பட்டபோது உங்கள் தைலத்தை உபயோகித்தேன். நான் அடைந்த அற்புதமான சுகத்திற்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். இதனை எனது நண்பரொருவர்க்கும் சிபார்சு செய்தேன். அவரது தலையிலும் கண்ணிலும் ஏற்பட்டிருந்த நோய்களை அது நீக்கிற்று."

திரு. K. A. D. அமரசேரில், வட்டன் சொல்லுவதாவது:- "நான்கு போத்தல்களை உபயோகித்தபின், நான் புத்தம் புதிய மனிதனைப் போலக் காணப்படுகின்றேன். இரவில் நல்ல நித்திரை வருகின்றது. தேகத்தைப் பொதுவாக நன்கு தயாரிக்கின்றது. ஆயின் இதை உபயோகிப்பதற்கு முன்னரோ அதிகாலை 2 அல்லது மூன்று மணிக்குமுன் நான் நித்திரை பெறவதே தர்ப்பலமாயிருந்தது."

திரு. P. E. பெர்னாண்டோ, வியங்கவெலாத் தோட்டம்:- "தலை, நாசி, காது சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது மிகச் சிறந்த தைலமாகும்"

திரு. எம். எ. செல்லையா, ஆசிரியர் மானிப்பாய்:- "தலை கண் சம்பந்தமான சகல நோய்களுக்கும் இது தக்க பலனை யளிக்க நான் கண்டேன்."

மிஸ். B பர்ச், பொலிஸ் பங்களோ, வரக்கப் பொலா:- "உங்கள் எண்ணெய் ஒரு பெரியவரமாகும். அது இல்லாமல் இருக்க முடியாது." போத்தல் (6 அவுன்ஸ்) ஒன்று ரூபா. 2-50 W. டேனியல் பெர்னாண்டோ வைத்தியசேகர, வெதமுதலியார் பாணந்துறை,பௌத்தமந்திரய,கொறிஸ்ரோட்,கொழும்பு; காஸில்ஹோட்டல்,கண்டி.

### நேத்திரானந்த தைலத்தின் மூலம் தமது வேலையைக் காப்பாற்றிக் கொண்ட கனவான்

சிங்கப்பூரிலிருந்து அனுப்பப்பெற்ற தராதரப் பத்திரம்

1937 ம் ஆண்டு ஜூன் மீ 18 ந் உ, பினங்கில் நடைபெறும் "மலாயாட் ரிபியூனல்" என்னும் பத்திரிகையில் ஆசிரியர் குழாத்தில் ஒருவராகக் கடமை பாக்கும் திரு. T. கோப் எழுதவதாவது:- சமீபத்தில் இலங்கையிலுள்ள எனது நண்பரொருவர் உங்கள் நேத்திரானந்த தைலத்தில் ஒரு போத்தலை எனக்கு அனுப்பி வைத்தார். சில காலமாக நான் கண்ணிலுள்ள நோயினால் நான் பெரிதும் வருந்தினேன். இதனால் எனது பத்திரிகை வேலையை விட்டுவிடும்படி கூறிச் சில கண் வைத்திய நிபுணர்கள் தெரிவித்தார்கள் ...... உங்கள் முதற் போத்தலே எனக்கு நன்மை விளைத்திருக்கின்றது என்பதில் எனக்கு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. அதில் இன்னுஞ் சில போத்தல்கள் வேண்டும்......தயவு செய்து C. O. D. போஸ்ற்மூலம் இன்னும் இரண்டு போத்தல்கள் அனுப்பி வையுங்கள்." வேண்டுவோர் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதவும்:- வேத முதலியார் W. டேனியல் பெர்னாண்டோ வைத்திய சேகரா. "ஸ்ரீவேதவளவு" பாணந்துறை, கொறிஸ்ரோட், புறக்கோட்டை

| தலைமை ஸ்தானம்: | கிளைஸ்தானம்: |
| --- | --- |
| வைத்தியசேகர முதலியார், டப்ளியு. டானியல் பெர்னாண்டோ, ஸ்ரீ வேதவளவும், பாணந்துறை. | பௌத்த மந்திர வைத்தியசாலை கோரிஸ் ரோட், கொழும்பு-இலங்கை காஸில் ஹோட்டல், கண்டி. |

**தந்தி விலாசம்:- வேதமுதலியார், பாணந்துறை**
Y 70.1-7-7-37 to 3.-6-38


### பட்சியின் உடம்பில் 2000 இறகுகள்

ஒரு பக்ஷியின் உடம்பில் எத்தனை இறகுகள் உள்ளன? அமெரிக்காவிலுள்ள இரு நிபுணர்கள் 78 விதமான பறவைகளைப் பிடித்தார்கள்; ஒரு பெண்மணியினிடம் கொடுத்து ஒவ்வொரு பறவையின் இறகுகளையும் பிடுங்கி எண்ணிக் கட்டிவைக்கச் சொன்னார்கள். பெரும்பாலான பறவைகளுக்கு இரண்டாயிரம் இறகுகளிருந்தன.

அன்போடியைந்த வழக்
கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த
தொடர்பு


### வட இலங்கை உணவுப் பொருள் விருத்திச் சங்கம்

வடமாகாணத்தில் ஐந்து ஏக்கருக்குக் குறையாத நிலமுடைய கமச்காரர் இச் சங்கத்தில் அங்கத்தவராய்ச் சேர்ந்து கொள்ளவும்.

வருட சந்தா ரூபாய் 2. பழைய அங்கத்தவர் தம்மால் வருமதிச் சந்தாவை அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம். எல்லா அங்கத்தவரும் தமது சந்தாவை இச்சங்கத் தனாதிகாரி வ. சோமசுந்தரத் தந்து, திருநெல்வேலி ஒற்றுமை நிதி என்ற விலாசமிட்டு அனுப்பவும். அங்கத்தவர் இச் சங்கச் சேவையால் இலாபமடையலாம்.

சி. சுப்பிரமணியம்
அக்கிராசனர்,

ஒக்ரான், யாழ்ப்பாணம்,    2-7-37.
(Q. 72. 6-7 to 5-10-37)

### சாலாமிஸ்திரி லேகியம்

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்துவதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனையுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக் கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாறு, சாலாமுஸ்லி,சப்பேமுத்ஸிலி பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம் பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளி விதை நாகப்பூ, லங்கபஸ்பம், அரக் பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்தசெந்தூரம், சாம்பிராணிபதங்கம் இன்னும், அநேக புஷ்டியான மூலிவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் நீரழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்திற்குள் உண்டாயிருக்கும் பக்கவாயு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாயு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற் சொல்லிய வியாதிகள் குணமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ரூத்தலுக்கு ரூபா பத்து, கால் ரூத்தலுக்கு ரூபா 5. தபாற்செலவு பிரத்தியேகம்

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாதகனால் முன் மணிஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை.
ஸ்ரீ சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை,
வீட்டு இலக்கம் 33
பழைய வாடி ரோட்டு
கோட்டமுனை
மட்டக்களப்பு, சிலோன்.
Y. 64. 1-1-37 to 31-12-37)

# விசேஷ அறிவித்தல்

## எஸ். வீரகத்திப்பிள்ளை அன்ட் சன் ஸ்

(கீர்த்திபெற்ற வியாபார சமுதாயம்)

**யாழ்ப்பாண மக்களுக்கு ஓர் விசேஷ கொடை!**
**ஆச்சரியத்தை உண்டுபண்ணும் பெரும் வட்டிக்கழிவு!!**

யாழ்ப்பாணம் பெரியகடையிலும் 3ம் குறுக்குத் தெருவிலும் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கும் நகைகள் அடைவு பிடிக்கும் எங்கள் ஸ்தாபனங்களில் நிகழும் ஆவணி மாசம் 1ந் திகதி தொடக்கம் அடைவு வைக்கப்படும் எந்தத் தொகைக்கும் குறைந்தவீத வட்டியாகிய 100க்கு 8வீதம் அறவிடத் தீர்மானித்திருக்கிறோமென்று இத்தால் யாவருக்கும் தெரியப்படுத்துகின்றோம்.

## பவுண்ட்மார்க் ஓடுகள்! பவுண்ட்மார்க் ஓடுகள்!

இந்நாட்டுக்கு முன்னொருபோதும் இறக்குமதி செய்யப்படிராத அத்துணை காத்திரம் பெற்ற ஓடுகளாயிருப்பதினாலேயே ஏராளமாக விலைப்பட்டு வருகின்றன.

இந்த ஆவணிமாசம் 1ந் திகதி தொடக்கம் வேறு அறிவித்தல் கொடுக்கும் வரையும் இந்த ஓடுகள் குறைந்த விலைக்கே விற்கப்படும்.

## எஸ். வீரகத்திப்பிள்ளை அன்ட் சன்ஸ்

வங்கிக்காரரும் நகை அடைவு பிடிப்போரும்
ஓடுகள் தேக்கமரங்கள் விற்பனை செய்வோரும்.

(Y 109. 11-8-37 to 11-8-38)    (வி)

## திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரைவுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா **500,000.**

ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம். ஆதாயமும் பெறலாம்

**வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.**

**தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.**

இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சப்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
(வி)    காரியாதிகாரி.
(Y. 182. 1-11-36 to 30-10-37.)


அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தானிடை


# தி நாஷனல் மியூச்சுவல் லைவ்

அசோஸியேஷன் ஒவ் ஆஸ்ட்ரலேஷியா லிமிடெட்

**"மிகப் பெரிய முன்னேற்றமுள்ள பிரிட்டிஷ் லைவ் காரியாலயம்"**

சுத்தமான மியூச்சுவலேயன்றிப் பங்காளரில்லாதது

மிக அதிகமான நன்கோடைப்பணம்
சாதாரணமான விகிதங்கள்
தாராளமான நிபந்தனைகள்

இலங்கைக் கிளை
கோர்னர் சதாம் & குவீன்ஸ் ஸ்ட்ரீட்ஸ், கொழும்பு.

யாழ்ப்பாணப் பிரதிநிதி    ஆர். எம். வெஸ்ட்,
எம். வல்லிபுரம்,    சிலோன் மானேஜர்
மானிப்பாய்.    (Y. 134. 1-9-36 to31-8-37) (வி)


அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற்
புறத்தாற்றிற் போஒய்ப்பெறுவதெவன்

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM, residinag at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai, Jaffna at their Press, the Saiva Prakas Press, Vannarponnai Jaffna on Thursday, August 19th 1937